**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – கட்டடங்கள் – அரசு மறுவாழ்வு இல்லம் – மதுரை, யா.புதுப்பட்டி அரசு மறுவாழ்வு இல்லக் கட்டடம் கட்ட நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டது – கூடுதல் நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.25, நாள்: 23.05.2014**

**ஜய–வைகாசி 9, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண்.25, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள்13.03.2012.
2. தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சென்னை–5, கடிதம் எண்.AEE/T5/40121/2013, நாள் 20.12.2013 மற்றும் நாள் 23.01.2014.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடித எண்.1798/மஇக(1)/2011, நாள் 14.02.2014.

––––

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஏனையவற்றுடன் மதுரை, யா.புதுப்பட்டி அரசு மறுவாழ்வு இல்லம் கட்டுவதற்கு பொதுப் பணித் துறையின் திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ரூ.1,80,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், சீரமைப்பு, பழுது நீக்கத்திற்கான செலவுகள் தவிர்த்து ஏனைய செலவுகளை ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், நவீன சமையலறை இல்லாதபட்சத்தில் நவீன சமையலறைக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவ்வாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித் துறை, சென்னை–5 அவர்கள் மதுரை, யா.புதுப்பட்டியில் அரசு மறுவாழ்வு இல்லக் கட்டிடம் சமையலறைக் கட்டுவதற்கான கருத்துரு, 191–வது Tender Award Committee முன் வைக்கப்பட்டு, குழு விரிவாக ஆய்வு செய்து, இத்திட்டத்திற்கு ரூ.1,90,09,993/– தேவைப்படுவதாகவும், எனவே, ஏற்கனவே ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகையான ரூ.1,80,00,000/–ம் கூடுதலாக தேவைப்படும் தொகை ரூ.10,09,993/–க்கு நிதி ஒப்பளிப்பும், ரூ.1,90,09,993/–க்கு திருத்திய நிர்வாக அனுமதி ஆணையும் வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. இத்திருத்திய நிர்வாக அனுமதி கோரும் கருத்துருவிற்கு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் ஒப்புதல் அளித்து, திருத்திய மதிப்பீட்டின்படி, யா.புதுப்பட்டி அரசு மறுவாழ்வு இல்லக் கட்டிடம் மற்றும் நவீன சமையலறைக் கட்டிடம் கட்ட ரூ.1,90,09,993/–க்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் ஆணையும், ரூ.10,09,993/– கூடுதல் நிதி ஒப்பளிப்பு வேண்டியும் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

[த.பி.பா]

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சென்னை அவர்களது பரிந்துரையினை அரசு ஆய்வு செய்து அதனை ஏற்று, மதுரை, யா.புதுப்பட்டி அரசு மறுவாழ்வு இல்லம், இல்லவாசிகள் தங்குவதற்கான கட்டிடம் மற்றும் நவீன சமையலறை கட்டுவதற்கு ரூ.1,90,09,993/—க்கு திருத்திய நிர்வாக ஒப்புதலும் மற்றும் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.1,80,00,000/— நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது போக, கூடுதலாக தேவைப்படும் ரூ.10,09,993/—க்கு (ரூபாய் பத்து இலட்சத்து ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று மூன்று மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4—இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**“4235—சமூகப் பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு – 02—சமூகநலன் – 101—மாற்றுத் திறனாளிகள் நலன்—பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II—மாநிலத் திட்டம் – JU—கட்டடங்கள் – 16—பெரும் பணிகள். (த.தொ.கு.4235—02—101—JU—1601)**

6. மேலே பத்தி 4—இல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினம், 2014—2015 ஆம் நிதியாண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். அவ்வாறு நிதியொதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கீடு 2014—2015க்கான வரவு செலவுத் திட்டக் கருத்துருக்கள் நிதித் (சந) துறைக்கு அனுப்பப்படும்போது இச்செலவினத்தை சேர்த்து அனுப்புமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை, நிதித் துறையின் இசைவுடன், அத்துறையின் அ.சா.எண்.25445/நிதி(சந)/2014, நாள் 20.05.2014—ன்படி வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.333 (முன்னூற்று முப்பத்தி மூன்று).

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை—78.
தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சென்னை—5.
மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை.
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், மதுரை.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை—35.
தலைமைக் கணக்காயர், சென்னை—18
தலைமைக் கணக்காயர், சென்னை—18 (பெயரில்)

**நகல்**
நிதித் (சந)/(வ.செ.பொ—II) துறை, சென்னை—9
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் பொதுப்பணி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—9.
மாண்புமிகு அமைச்சர் (சந(ம)சஉதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—9.
செயலரின் தனிச்செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை—9.
இ.கோ./உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.